**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.4/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.1** |
| Name | **:** | செந்தமிழ்செல்வி |
| Father's/Husband Name: | : | பெருமாள் |
| Address : | : | 1/19, நடுத்தெரு, சின்னமனக்குடி, அரியலூர் மாவட்டம். |
| Age | : | 38/2022 |

<u>தேதி: 13/12/2022</u>

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தற்போது பெரம்பலூர் மதுவிலக்க அமலாக்க பிரிவில் உதவி உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். கடந்த 15/11/2020 ம் தேதி மாலை 19.30 மணியளவில் என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை தலைமை காவலர் திரு.மான்சிங், முதல்நிலை காவலர் திரு.கார்த்திக் ஆகியோருடன் நான் புறப்பட்டு மாலை ரோந்து அலுவலராக பெரம்பலூர்-ஆத்தூர் ரோடு மதர்சா பிரிவு ரோடு எதிரே வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்த போது அங்கு வந்த TN 46 Y 1109 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தை மறித்து தணிக்கை செய்த போது அதனை ஓட்டி வந்த பெரம்பலூர் திருநகரை சேர்ந்த முத்தையா மகன் முத்துசாமி

என்பவர் வாகனத்தை மது போதையில் ஓட்டி வந்தது தெரிய வந்தது. அவர் மீது மது போதையில் வாகனம் ஓட்டியதற்கான மோட்டார் வாகனச்சட்டப்படி வழக்கு பதிவு செய்தோம். மேற்படி முத்தையா அங்கிருந்து யாருக்கோ போன் மூலம் தகவல் கொடுத்தார் சற்று நேரத்தில் அங்கு துறைமங்கலம் நியூ காலனியை சேர்ந்த சீனிவாசன் என்பவரது மகன் சங்கிலி மற்றும் சங்கிலியின் மகன்கள் பாலாஜி மற்றும் கோகுல் ஆகியோர் வந்தனர். வந்தவர்கள் போலிஸ்கார நாய்களுக்கு இதே வேலையா போச்சு எங்கள் பெயரில் உள்ள வண்டியின் மீது எப்படி வழக்கு போடாலாம் எனவும் உங்களால் ஒன்னும் புடுங்க முடியாது எனவும் மீறி கேஸ் போட்டால் அடிச்சு கொன்றுவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்தனர். வாகனத்தை அவர்கள் எடுப்பதற்கு முற்பட்ட போது அவர்களிடம் இருந்து வாகனத்தை நான் கைப்பற்றினேன். நிலையம் ஆஜராகி மேற்படி சம்பவம் குறித்தும் அரசு பணி செய்த எங்களை செய்யவிடாமல் தடுத்தற்காகவும் கோகுல், சங்கிலி மற்றும் பாலாஜி ஆகியோர் மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த புகாரை நான் தான் கொடுத்தேன். அது அ.சா.ஆ.1 அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(1 மற்றும் 2-ம் எதிரி தரப்பில்)**

இந்த வழக்கிற்கான புகாரை நான் தான் கைப்பட எழுதினேன். அன்றைய தினம் மாலை நேரம் ரோந்து பணிக்கு செல்ல யார்

உத்தரவிட்டார்கள் என்றால் வழக்கம் போல எங்களது பணிக்கு சென்றோம். எந்த பணிக்கு ரோந்து பணிக்கு செல்கிறோம் என பொது நாட்குறிப்பில் எழுதி இருப்போம் என்றால் சரிதான். 15/11/2020 அன்று நான் இந்த புகாரை கொடுத்தேன். அந்த புகாரை நான் காவல் ஆய்வாளரிடம் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தினமே என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று அதிக மழை பொழிவு இருந்தது என்றால் எனக்கு சரியாக நினைவு இல்லை. வாகனத்தை ஓட்டி வந்த முத்தையா என்பவர் மீது வழக்கு ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மது போதையில் முத்துசாமி வந்த போது அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியது மற்றும் விபத்து பதிவேடு, Breath analysis ஆகியவற்றை நான் காவல் ஆய்வாளரிடம் அன்றைய தினம் கொடுத்தேன். மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 ன் படி மது போதையில் வாகனம் ஓட்டினார் என முத்துசாமி மீது வழக்கு பதிவு செய்தோம். மோட்டார் வாகன சட்டப்படி பதிவு செய்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அந்த ஆவணங்கள் அனைத்தும் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்து விட்டேன். முத்துசாமி ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் வழக்கு பதிவு செய்த போது முத்துசாமியே அந்த வாகனம் அவருடையது இல்லை என்றும் அவரது நண்பரின் வாகனம் என்றும் கூறினார். அப்போது இரவு 7.30 மணி முதல் 8.00 மணி இருக்கலாம். பொதுவாக நாங்கள் வாகன தணிக்கை செய்யும் போது அந்த

வாகனத்திற்கான பதிவு சான்றிதழ் மற்றும் வாகன ஓட்டுநர் உரிமம் சரிபார்ப்போம் என்றால் சரிதான். அவ்வாறு இல்லாத பட்சத்தில் எங்களிடம் இருக்கும் App மூலம் அந்த வாகனம் யாருடையது என சரிபார்ப்போம் என்றால் சரிதான் ஆனால் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட போது எங்களுக்கு அந்த வசதி இல்லை. ஆஜர் எதிரிகளை எப்போது கைது செய்தேன் என்றால் அவர்களை நான் கைது செய்யவில்லை. முத்துசாமி அன்றைய தினம் மது போதையில் இல்லை என்றாலும் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் அவரை வழி மறித்து லஞ்சம் கேட்டார்கள் என்றாலும் அவர் கொடுப்பதற்கு மறுத்ததால் அந்த வாகனத்தின் உரிமையாளர்கள் மீது தவறான புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தின் பதிவு எண்னை மட்டுமே வைத்து இந்த வழக்கு தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், அவர்களை நான் ஒரு போதும் பார்த்தில்லை என்றாலும் சரியல்ல. முத்துசாமி உண்மையிலேயே மது போதையில் வந்து இருந்தால் அவர் மீதான பதிவு செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிக்கும் என்றால் சரியல்ல. நான் மது போதையில் பதிவு செய்யப்பட்ட எந்த ஆவணங்களையும் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் பெரம்பலூர்-ஆத்தூர் ரோட்டில் ரோந்து பணிக்கு சென்றது குறித்து பொது நாட்குறிப்பில்

பதிவு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது இந்த வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.